இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 26-07-2025

# எதிர்ப்புக்குப் பிறகு பின் வாங்கல்!

மும்மொழிக் கொள்கைக்கு நாடு முழுவதும் எதிர்ப்புக் கிளம்பிய நிலையில் பின்வாங்கி இருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

தமிழ்நாட்டைச் சேர்ந்த காங்கிரஸ் மக்களவை உறுப்பினர் மாணிக்கம் தாகூர், மும்மொழிப் பிரச்சினை குறித்து கேள்வி எழுப்பினார். அதற்கு ஒன்றிய கல்வித் துறை இணை அமைச்சர் ஜெயந்த் சவுத்ரி எழுத்துப்பூர்வமாக பதில் அளித்துள்ளார். அதில் ஒன்றிய பா.ஜ.க. அரசின் நிலைப்பாடு மாறி இருக்கிறது. “மும்மொழிக் கொள்கையை மாநில அரசுகளே முடிவு செய்யலாம்” என்று அதில் கூறப்பட்டுள்ளது.

“கல்வி என்பது பொதுப்பட்டியலில் உள்ளதால் மும்மொழிக் கொள்கையைச் செயல்படுத்துவது குறித்து மாநிலத்தின் தேவைகள் மற்றும் பன்முகத் தன்மையைக் கருத்தில் கொண்டு மாநில அரசுகள் சுதந்திரமாக முடிவுகள் எடுக்கலாம். மும்மொழிக் கொள்கையை நெகிழ்வான முறையில் பயன்படுத்தலாம். எந்த மாநிலத்தின் மீதும் எந்த மொழியும் திணிக்கப்படாது. இது குறித்து கல்வியாளர்களுடன் ஒன்றிய அரசு தொடர்ந்து ஆலோசனைகள் செய்து வருகிறது” என்றும் அமைச்சர் ஜெயந்த் சவுத்ரி சொல்லி இருக்கிறார்.

மும்மொழிக் கொள்கை விவகாரத்தில் மற்ற மாநில மொழிக்காரர்களின் கடும் எதிர்ப்பைத் தொடர்ந்து ஒன்றிய பா.ஜ.க. அரசு திடீர் பல்டி அடித்திருப்பதையே இது காட்டுகிறது.

இந்தித் திணிப்புக்கு எதிராகத் தொடர்ந்து போராடி வருகிறது தமிழ்நாடு. அதிலும் குறிப்பாக, தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள், மிகக்கடுமையாக தனது எதிர்ப்பைப் பதிவு செய்து வருகிறார். 18.10.2022 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் இந்தி எதிர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

**“தமிழ்நாட்டின் மொழிக் கொள்கை என்பது, தமிழும், ஆங்கிலமும் என்ற இருமொழிக் கொள்கை. தமிழ் மொழி இந்திய அரசின் ஆட்சிமொழிகளில் ஒன்றாக ஏற்கப்பட வேண்டும். மாநில ஆட்சி மொழிகள் அனைத்தும் இந்திய அரசின் ஆட்சிமொழியாக ஆக வேண்டும். இந்தி பேசாத மாநில மக்கள் மீது இந்தி மொழி எந்த வகையிலும் திணிக்கப்படக் கூடாது. இந்தி பேசாத மாநில மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் தொடர வேண்டும். சென்னை உயர்நீதிமன்ற வழக்காடு மொழியாக தமிழை ஆக்க வேண்டும்” என்று குறிப்பிட்ட முதலமைச்சர் அவர்கள், இந்தித் திணிப்புக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.**

**தேசியக் கல்விக் கொள்கை என்ற பெயரால் இந்தியைத் திணிக்க முயற்சி எடுத்தது பா.ஜ.க. அரசு. அதனையும் முதலமைச்சர் அவர்கள் ஏற்கவில்லை. “தேசியக் கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டால்தான் பள்ளிக் கல்வித் துறைக்குத் தர வேண்டிய ரூ.2000 கோடியைத் தருவோம்” என்று நிபந்தனை விதித்தார்கள். ‘ரூ.2000 கோடி அல்ல, 10 ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்தாலும் தேசியக் கல்விக் கொள்கையை ஏற்க மாட்டோம்’ என்று போர்ப் பிரகடனம் செய்தார். இதனை ஒன்றிய அரசு கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.**

**தமிழ்நாடு அரசின் இந்தி மொழி எதிர்ப்புப் போராட்டம் மற்ற மொழிக்காரர்களாலும் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டது. இந்தியால் எத்தனை மொழிகள் அழிந்துள்ளன என்று முதலமைச்சர் சொல்லிக் காட்டிய பட்டியல், வட மாநிலத்தவர்கள் கண்ணை லேசாகத் திறந்தது. ‘தமிழ்நாடு முதலமைச்சர் சொல்வது உண்மைதான்’ என்று பலரும் சமூக வலைதளங்களில் எழுதத் தொடங்கினார்கள். இந்தியா முழுக்க பலருக்கும் மொழித் திணிப்பின் கொடுமையை இது உணர்த்தியது.**

**இந்த வரிசையில் மராட்டியத்தில் நடந்த போராட்டம் என்பது மிக முக்கியமானது. மும்மொழிக் கொள்கையை அமல்படுத்தும் சட்டத்தை அம்மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. கூட்டணி அரசு கொண்டு வந்தது. அதற்கு எதிராக மராட்டிய மாநிலத்தின் முக்கியமான அரசியல் கட்சிகள் அனைத்தும் (தமிழ்நாட்டைப் போலவே) போர்க்குரல் எழுப்பின. அரசியல் ரீதியாக இருபது ஆண்டுகளாக பிளவுபட்டு இருந்த பால்தாக்கரே குடும்பமே ஒன்று பட்டது. இந்தித் திணிப்புக்கு எதிராகவும், மராட்டிய மொழியை ஆதரித்தும் மகாராஷ்டிரா முழுக்க போராட்டம் நடந்த நிலையில் மும்மொழித் திணிப்பில் இருந்து பா.ஜ.க. கூட்டணி அரசு பின்வாங்கியது.**

**மும்மொழிக் கொள்கையை மாநில அரசே முடிவு செய்யலாம் என்று முடிவெடுத்துள்ள ஒன்றிய அரசு மேலும் சில முடிவுகளை எடுக்க வேண்டும். மும்மொழித் திட்டத்தை ஏற்றுக் கொண்டால்தான் பள்ளிக் கல்வித் துறைக்குத் தர வேண்டிய பணத்தைத் தருவோம் என்ற முடிவை மாற்றிக் கொள்ள வேண்டும்.**

கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார் அவர்கள் நாடாளுமன்றத்தில் ஒரு தகவலைப் பெற்றுள்ளார். “சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ், கடந்த மூன்று ஆண்டுகளில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?” என்பது இவர் கேட்ட கேள்வி. தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம் ஆகிய மூன்று மாநிலங்களுக்கும் இந்த ஆண்டு எந்த நிதியும் அனுப்பவில்லை என்று பதில் வந்துள்ளது. மொழித்திணிப்பு என்பது தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு எத்தகைய அநீதியை இழைக்கிறது என்பதை இது காட்டுகிறது. ஒன்றிய பா.ஜ.க. அரசு தனது நடவடிக்கைகளை முற்றிலும் மாற்றியாக வேண்டும்.

**சில மாதங்களுக்கு முன் கோவை வந்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா தனது தனிப்பட்ட உரையாடலில், “தமிழ்நாடு முதலமைச்சர் சொல்லும் சில முன்னெடுப்புகள் தமிழ்நாட்டைத் தாண்டி மற்ற மாநிலங்களுக்கும் பரவுகிறது. அதுதான் நமக்கு நெருக்கடியை ஏற்படுத்துகிறது” என்று சொல்லி இருக்கிறார். அத்தகைய நெருக்கடிதான், பா.ஜ.க. அரசை பின் வாங்க வைத்துள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இங்கிருந்தபடியே இந்தியாவை இயக்கி வருகிறார் என்பதை இது உணர்த்துகிறது.**



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.7.2025) சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் பள்ளிக் கல்வித் துறைக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள 2,457 இடைநிலை ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், அ.வெற்றி அழகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், ஆசிரியர் தேர்வு வாரிய தலைவர் மற்றும் பொது நூலகத் துறை இயக்குநர் திருமதி எஸ்.ஜெயந்தி, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநிலத் திட்ட இயக்குநர் மருத்துவர் மா.ஆர்த்தி, மாநில பெற்றோர் – ஆசிரியர் கழக துணைத் தலைவர் பி.வி.பி.முத்துக்குமார், பள்ளிக் கல்வி இயக்கக இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தனியார் பள்ளிகள் இயக்கக இயக்குநர் முனைவர் பெ.குப்புசாமி, தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ், ஆசிரியர் தேர்வு வாரிய உறுப்பினர் முனைவர் மு.பழனிச்சாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## ரூ.6078.40 கோடியில் பேரூரில்

# கடல்நீரை குடிநீராக்கும் நிலைய கட்டுமானப் பணிகள்!

## அமைச்சர் கே.என்.நேரு ஆய்வு செய்தார்!

சென்னை, ஜூலை 26 -

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்கே.என்.நேரு அவர்கள் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் 6 ஆயிரத்து 78 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பேரூரில் அமைக்கப்பட்டு வரும் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தின் கட்டுமான பணிகளை நேற்று முன்தினம் (24.7.2025) ஆய்வு செய்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான குடிநீர், பூண்டி, சோழவரம், புழலேரி, கண்ணன் கோட்டை தேர்வாய்கண்டிகை, செம்பரம்பாக்கம், வீராணம் ஆகிய ஏரிகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. சென்னை மாநகரின் நீண்ட கால குடிநீர்த் தேவை மற்றும் மக்களின் அன்றாட குடிநீர் தேவையைக் கருத்தில் கொண்டு, சென்னை குடிநீர் வாரியம் பல்வேறு நடிவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது மற்றும் நெம்மேலியில் உள்ள 150, 110 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் மூலம் நாளொன்றுக்கு 1150 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.



நேற்று முன்தினம் (24.07.2025) நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் செங்கல்பட்டு மாவட்டம் வட்டம் பேரூரில் 6 ஆயிரத்து 78 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், அமைக்கப்பட்டு வரும் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தின் கட்டுமான பணிகளை நேரில் சென்று ஆய்வு செய்தார். இவ்வாய்வின் போது, சென்னை குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் தி. சினேகா, மேற்பார்வை பொறியாளர் இ.சாந்தி, செயற்பொறியாளர் ஸ்.கிருபாகரவேல் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் 2023–ல் அடிக்கல் நாட்டினார்!**

சென்னையின் வளர்ச்சிக்கேற்ப குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்துவதற்காக முதலமைச்சர் அவர்கள் 21.8.2023 அன்று சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) நிதியுதவியுடன் செங்கல்பட்டு மாவட்டம், கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரைக் குடி நீராக்கும் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

இந்நிலையத்தின் கட்டுமான பணிகள் தற்போது முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. கடல் நீரை உட்கொள்ளும் கட்டமைப்பு (Intake Structure), செதிலடுக்கு வடிகட்டி (Lamella Clarifier), சவ்வூடு வெளியேற்றும் தெளிந்த நீர் தொட்டி (RO Permeate Tank), நடுநிலைபடுத்தும் தொட்டி (Neutralization Pit), நீர் சேகரிப்பு தொட்டி (Product water tank), சுத்திகரிக்கப்பட்ட நீர் சேகரிப்பு தொட்டி (Clear water reservoir), கசடுகளை கெட்டிப்படுத்தும் தொட்டி (Sludge Thickener), நிர்வாகக் கட்டிடம் (Admin Building), பண்டகசாலை (Ware house), சுண்ணாம்பு செறிவூட்டும் நிலையம் (Limestone Filter), எதிர்மறை சவ்வூடு பரவல் நிலையம் (RO Building), எதிர்மறை சவ்வூடு பரவல் நீர் செலுத்தும் தொட்டி (RO Feed tank), காற்றழுத்தம் மூலம் எண்ணெய் மற்றும் கசடுகளை அகற்றும் தொட்டி (Dissolved Air Flotation), புவிஈர்ப்பு ஈரடுக்கு வடிகட்டி நிலையம் (Gravity Dual Media Filter), இரசாயன கட்டிடம் (Chemical Building), மின் சார கட்டிடம் (Electrical Building) மற்றும் தொழிற்கூடங்களுக்கான (Work shop) கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றது.

**பேரூரிலிருந்து போரூர் வரை குழாய் பதிக்கும் பணிகள்!**

கடல் சார் பணிகளாக 2500 மில்லி மீட்டர் விட்ட முள்ள HDPE குழாய்கள் கடல் படுக்கையின் அடியில் பதிக்கப்பட்டுள்ளது. இதில் கடல் நீரை உட்கொளரும் குழாய் 1140 மீட்டர் நீளத்திற்கும் 2 கடல் நீரை உட்கொனரும் குழாய்கள் 1150 மீட்டர் நீளத்திற்கும் மற்றும் உவர்நீர் வெளியேறும் குழாய் 756 மீட்டர் நீளத்திற்கும் குழாய் பதிக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. கடல் நீரை உட்கொள்ளும் தொட்டி மற்றும் நீரேற்று நிலைய (Intake and Pumping Station) கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தில், பேரூர் நீரேற்று நிலையம், பேரூரிலிருந்து போரூர் வரை 59 கிலோ மீட்டர் நீளத்திற்கு குழாய் பதிக்கும் பணிகள் மற்றும் போரூரில் நீர் தேக்க தொட்டி, நீர் உந்து நிலையம் அமைக்கும் பணிகளுக்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், மண்டலம் 13 (அடையாறு)க்குட்பட்ட பள்ளிப்பட்டு மற்றும் திருவான்மியூர் நீரேற்ற நிலையங்களிலிருந்து சுற்றியுள்ள பகுதிகளுக்கு 24/7 தொடர்ச்சியான குடிநீர் விநியோகம் செய்ய குடிநீர் கட்டமைப்பு விரிவுபடுத்தும் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளது. நடைபெற்று வரும் கட்டுமான பணிகளை நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் முடித்திடுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த திட்டத்தின் மூலம், பெருநகர சென்னை மாநகராட்சி, தாம்பரம் மாநகராட்சி மற்றும் சென்னை மாநகராட்சியின் அருகாமையில் உள்ள 20 ஊராட்சிகள் ஆகிய பகுதிகளில் உள்ள 22.67 லட்சம் மக்கள் பயன் அடைவார்கள்.

**நெம்மேலி நிலையப் பணிகள்!**

அதன் பின்னர், நெம்மேலியில் இயங்கி வரும் நாளொன்றுக்கு 110 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் நிலையம் மற்றும் 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல் நீரை குடியிருக்கும் நிலையங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார்.

இவ்வாய்வின் போது, சென்னை குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் திருமதி. தி.சினேகா, மேற்பார்வை பொறியாளர் திருமதி.இ.சாந்தி, செயற்பொறியாளர் ஸ்.கிருபாகரவேல் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## சைதாப்பேட்டை முதல் தேனாம்பேட்டை வரையிலான உயர்மட்ட மேம்பாலம்!

# மழைக்காலத்திற்குள் அடித்தளப் பணிகளை முடித்திட வேண்டும்!

## அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்து – அதிகாரிகளுக்கு உத்தரவு!

சென்னை, ஜூலை 26 -

சென்னை, சைதாப்பேட்டை முதல் தேனாம்பேட்டை வரை, நான்கு வழித்தட உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணிகளை, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை அண்ணா சாலையில், சைதாப்பேட்டை முதல் தேனாம்பேட்டை வரை, வாகனப் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில், 3.20 கி.மீ. நீளத்திற்கு, நான்கு வழித்தட உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணிகள் ரூ.621 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 19.1.2024 அன்று தொடங்கி வைத்தார்.

இம்மேம்பாலப் பணிகளின் முன்னேற்றத்தை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நேற்று முன்தினம் (24.7.2025) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். தற்போது, 30% பணிகள் நிறைவு பெற்றுள்ள நிலையில், மெட்ரோ சுரங்கப்பாதை மற்றும் பிற இடங்களில் நடைபெறும் அடித்தள, மைக்ரோ பைல், ஜியோ சிந்தடிக் லேயர் மற்றும் வெல்டிங் பணிகளை விரைவாக முடிக்கவும், மழைக் காலத்திற்கு முன் அடித்தள பணிகள் நிறைவு பெறும் வகையில் பணிகளை விரைவுப்படுத்த அதிகாரிகளுக்கு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.



சென்னை, சைதாப்பேட்டை முதல் தேனாம்பேட்டை வரை, வாகனப் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் ரூ.621 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நான்கு வழித்தட உயர்மட்ட மேம்பால கட்டுமானப் பணிகளை, நேற்று முன்தினம் (24.7.2025) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கள ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ், நெடுஞ்சாலைத் துறை சிறப்பு தொழில் நுட்ப அலுவலர் இரா.சந்திரசேகர், தலைமைப்பொறியாளர் (கட்டுமானம்மற்றும்பராமரிப்பு,அலகு) கு.கோ.சத்யப்பிரகாஷ், கண்காணிப்புப் பொறியாளர் வி.சரவணசெல்வம், கோட்டபொறியாளர் பி.சந்திரசேகர், ஒப்பந்ததாரர் ஜேகுமார்கன்ஸ்ட்ரக்ஷன் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**பொதுமக்களுக்கு இடையூறு இருக்கக் கூடாது!**

உயர்மட்ட மேம்பாலப் பணிகள் நடைபெறும் இடங்களில் போக்குவரத்து காவல் துறை, மின் வாரியம், மாநகராட்சி, குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரியம், வனத்துறை ஆகிய துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு, பொது மக்களுக்கு இடையூறு இல்லாமல் பணிகள் நடைபெற தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மற்றும் இந்தாண்டு இறுதிக்குள் அனைத்து பணிகளை முடிக்கவும் அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு ஆணையிட்டார்.

இந்தக் ஆய்வின்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் மருத்துவர் இரா. செல்வராஜ், நெடுஞ்சாலைத் துறை சிறப்பு தொழில்நுட்ப அலுவலர் இரா.சந்திரசேகர், தலைமை பொறியாளர்(கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு) கு.கோ.சத்யப்பிரகாஷ், கண்காணிப்புப் பொறியாளர் வி.சரவணசெல்வம், கோட்ட பொறியாளர் பி.சந்திரசேகர், ஒப்பந்ததாரர் ஜே.குமார் கன்ஸ்ட்ரக்ஷன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.